# ராசலீலை



ராசலீலை புரிந்திட வந்த கோபியர் உன் ,

பாசவலையில் சிக்கியதேன் கண்ணா !

ராசலீலை......

மகரகுண்டலங்கள் உன் காதினிலாடிட ,

மரகதமணிமாலை மார்பினில் அசைந்திட ;

சுழல்கின்ற கண்கள் காதலைபொழிந்திட - உந்தன் ,

குழலிசையில் மயங்கி மாதர்கள் வந்தனரே !

ராசலீலை......

மஞ்சள்பட்டு உன்னரையில் துலங்கிட ,

அஞ்சனமுன் கண்களை அழகுற செய்திட ;

சந்தனநறுமணம் உடலெல்லாம் பரவிட - உன்னிடம் ,

வந்தவர்கள் களிப்புடன் கீதங்கள் பாடினரே !

ராசலீலை......

குழல்சரிந்து நின்மார்பினில் புரண்டிட ,

கழல்கள்கால்களில் இன்னிசையெழுப்பிட ;

வளையல்கள் நின்கரங்களில் குலுங்கிட - உன்னை,

வளைத்தே அவர்களும் நடனமாடினரே !